இணை ஆணையர் அலுவலகம்,
இந்து சமய அறநிலையத்துறை,
விழுப்புரம்.

**<u>திருக்கோயில்களில் 2017ஜீன் (வைகாசி–ஆனி) மாதம் நடைபெறவுள்ள திருவிழாக்கள் விபரம்</u>**

| வ. எண் | திருக்கோயிலின் பெயர் மற்றும் தலவரலாறு/ அமைவிடம் சுருக்கமாக | முக்கிய திருவிழாக்கள் மாதம் வாரியாக | திருவிழாக்களின் முக்கிய நிகழ்வுகள் தேதி வாரியாக | திருவிழாக்கள் சிறப்புகள் சுருக்கமாக | தொலைபேசி எண்கள் | மின்அஞ்சல் முகவரிகள் |
|---|---|---|---|---|---|---|
| விழுப்புரம் மாவட்டம் | | | | | | |
| 1. | அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயில், விழுப்புரம் நகர் (ம) வட்டம்.<br>**<u>தலவரலாறு:</u>** கைலாசநாதர் திருக்கோயில், முதலாம் ராஜராஜன்,முதலாம் குலோத்துங்கன் கோப்பெருமசிங்கன், இராஜநாராயணசம்பவராயன், சடையவர்மன் ஆகிய மன்னர்கள் இத்திருக்கோயிலை திருப்பணி செய்ததாக கல்வெட்டுகள் மூலம் அறியலாம். மேலும் நாற்பது கற்தூண்கள் அமைக்கப்பட்டன. நடுவில் அமைந்துள்ள பன்னிரண்டு தூண்களில் நாயக்கர் கால சிற்பங்களும், சில தூண்களில் நாயக்க மன்னர்களின் தேவியரும் பொறிக்கப்பட்டுள்ளன.இவ்வாலயம் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பே விழுப்புரம் நகரத்தில் பல்வேறு ஜாதியினர் கோயில் திருவிழாவை பத்து தினங்களாக கொண்டாடியது கல்வெட்டுகள் மூலம் அறியலாம். வண்ண சரபம் தண்டபாணி சுவாமிகள் இங்குள்ள வினாயகர், முருகன், கைலாசநாதர், பெரியநாயகி அம்மன் மீது பதிகங்கள் பாடியுள்ளார். | வைகாசி உற்சவம் (வைகாசி 15 முதல் வைகாசி 24 வரை நடைபெறவுள் ளது)<br><br>வைகாசி 27 திருஞானசம்ப ந்தர் உற்சவம்<br><br>ஆனி 14 மாணிக்கவாச கர் உற்சவம்<br><br>ஆனி 16 – ஆனி திருமஞ்சனம் | பிரம்மோற்சவம் (29.04.2017 முதல் 10.05.2017 முடிய நடைபெறவுள்ளது.)<br><br>வைகாசி உற்சவம் (29.05.2017 முதல் 07.06.2017 முடிய நடைபெறவுள்ளது)<br><br>10.06.2017– திருஞானசம்பந்தர் உற்சவம்<br><br>28.06.2017– மாணிக்கவாசகர் உற்சவம்<br><br>30.06.2017–ஆனி திருமஞ்சனம் | 08.05.2017 அன்று திருதேர் உற்சவம் நடைபெறவுள்ளது. (சகடை தேர் இழுக்கப்படுகிறது)<br><br>சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் ஆராதனைகள் செய்யப்படும்.<br><br>ஸ்ரீதிருஞானசம்பந்தருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.<br><br>ஸ்ரீமாணிக்கவாசகருக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.<br><br>சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் ஆராதனைகள் செய்யப்படும். | செயல் அலுவலர். 8754231001<br><br>எழுத்தர். 9787104922 | parikkalgroup@ gmail. com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2. | அருள்மிகு வைகுண்டவாசப்பெருமாள் திருக்கோயில், விழுப்புரம் நகர் (ம) வட்டம்<br>**தலவரலாறு:**<br>முதலாம் பராந்தகனுடைய முப்பத்து மூன்றாவது ஆட்சியாண்டில் ஊர் நடுவில் விண்ணகர் பெருமாள் கோயில் கட்டப்பெற்று திருப்பணிகளுக்காக பத்து செறுவு நிலம் விடப்பெற்றதாக இக்கோயில் கல்வெட்டு கூறுகிறது. அன்றைய விண்ணகர் பெருமாள் கோயில் இன்றைய வைகுண்டவாசப் பெருமாள் 3கோயிலாகும். | வைகாசி 16 முதல் வைகாசி 27 வரை | பிரம்மோற்சவம் (30.05.0217 முதல் 10.06.2017 முடிய நடைபெறவுள்ளது.) | 09.06.2017 அன்று திருத்தேர் உற்சவம் நடைபெறவுள்ளது. (சகடை கட்டுத்தேர் இழுக்கப்படும்) | செயல் அலுவலர். 8754231001<br><br>எழுத்தர். 9943073722 | parikkalgroup@gmail.com |
| 3. | அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோயில், உ.கீரனூர், உளுந்தூர்பேட்டை வட்டம்.<br>**தலவரலாறு: ஏதுமில்லை** | வைகாசி 24 | வைகாசி விசாகம் – 07.06.2017 | சிறப்பு அபிஷேக அலங்காரம் ஆராதனைகள் நடைபெறும். | செயல் அலுவலர். 8754231001 எழுத்தர். 9943073722 | parikkalgroup@gmail.com |
| 4. | அருள்மிகு இலட்சுமிநரசிம்மசுவாமி திருக்கோயில், பூவரசங்குப்பம், விழுப்புரம் வட்டம்.<br>**தலவரலாறு:**<br>பகவான் நரசிம்மர் அகோபிலத்தில் இரண்யனை அழித்தபிறகு உக்கிரம் தணியாமல் அலைந்தார். இரண்யனின் கொடுமைக்கு பயந்து காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்து தவமிருந்த முனிவர்கள் நரசிம்மரின் தரிசனம் கிடைக்க வேண்டினர். அப்படி காட்சியளித்த தலம் இது. | நரசிம்ம ஜெயந்தி– சித்திரை 26<br><br>வைகாசி விசாகம் – வைகாசி 24<br><br>ஆனி திருமஞ்சனம் – ஆனி 16 | நரசிம்ம ஜெயந்தி– 09.05.2017<br><br>வைகாசி விசாகம் – 07.06.2017<br><br>ஆனி திருமஞ்சனம் – 30.06.2017 | சிறப்பு அபிஷேக அலங்கார, ஆராதனைகள் நடைபெறும்.<br><br>சிறப்பு அலங்காரம் ஆராதனைகள் நடைபெறும்.<br><br>சிறப்பு அபிஷேக அலங்கார, ஆராதனைகள் நடைபெறும் | செயல் அலுவலர். 8754231001<br><br>எழுத்தர். 8300039408 | parikkalgroup@gmail com |
| 5. | அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில், மேல்மலையனூர் நகர் மற்றும் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.<br>**தலவரலாறு**<br>ஆதிகாலத்தில் சிவப்பெருமானைப் போன்று பிரம்மனுக்கும் ஐந்து தலைகள் இருந்தன. ஒருமுறை கயிலைக்கு வந்த பிரம்மனை சிவன் என்று நினைத்து பிரம்மனுக்கு பார்வதி தேவி பாதபூஜை செய்யதார். பிரம்மன் அதை | ஆனி 9 | 23.06.2017 அமாவாசை | ஊஞ்சல் உற்சவம் | 04145–234234 | angalamman temple@gamil.I. com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | மறுக்கவில்லை. அச்சமயம் சிவபெருமான் வந்து சேர்ந்திட, அதிர்ந்த பார்வதி பிரம்மனுக்கு தண்டனைதர வேண்ட, சிவபெருமான் பிரம்மனின் ஐந்து தலைகளில் ஒன்றினை கொய்திட அத்தலையானது சிவபெருமானின் கையிலேயே ஒட்டிக் கொண்டது. தனது கணவனின் நிலையை அறிந்த சரஸ்வதிதேவி, அதற்கு காரணமான பார்வதிதேவியை நோக்கி, செடி, கொடிகளை அணிந்து, கோர ரூபமாய் அலைந்து திரிய வேண்டுமென சபித்தாள். பாவ விமோசனத்தை திருமாலிடம் கேட்டறிந்த பார்வதி தேவி சிவனுடன் தண்ட காருண்யத்தை அடைந்து, அங்குள்ள மயானத்தருகில் ஒரு தீர்த்தமுண்டாக்குமாறு சிவனிடம் கோர, சிவனும் தனது சூலாயுதத்தினால் தீர்த்தம் உண்டாக்கினார். அத்தீர்த்தம் தற்போது “அக்னி தீர்த்தம் ” என்று அழைக்கப்படுகிறது. பார்வதி தேவி மயானத்தில் உணவை தருவித்து சூறையாடினாள். உணவையருந்த பிரம்மகபாலம் சிவனின் கையிலிருந்து கீழிறங்க, சிவன் தீர்த்தத்தில் நீராடி, தோஷம் நீங்கப்பெற்றார். ஆனால், பிரம்மகபாலம் பார்வதி தேவியை பற்றிக்கொண்டது. தேவி பேருருவங்கொண்டு, தனது காலால் கபாலத்தை மிதித்து பின்பு அதனை மாலையாக கழுத்தில் அணிந்துக் கொண்டாள். அப்போது தேவியின் கோர உருவம் நீங்கியது. அந்த திருவுருவமே அருள்மிகு அங்காளம்மன் ஆகும். | | | | | |
| 6. | அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.<br>**<u>தலவரலாறு</u>**<br>திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற சிவத் தலங்களுள் திருவக்கரையும் ஒன்று. தொண்டை நாட்டிலுள்ள 32 சிவத்தலங்களுள் இது 30வது ஸ்தலமாகும். | வைகாசி 26 | 09.06.017 | பௌர்ணமி உற்சவம் | 9943530122 | vakrakaliamman@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கடலூர் மாவட்டம் | | | | | | |
| 7. | அருள்மிகு பாடலீஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர், கடலூர் மாவட்டம். இத்திருக்கோயிலின் தலவிருட்சம், பாதிரிமரமாகும். பாதிரிமரங்கள் அடர்ந்த வனத்தில் அம்மன் தவம் இயற்றி இறைவனை திருமணம் செய்தது. புலிக்கால் முனிவர், வியாக்ரபாதர் பூஜித்த தலம், அப்பர், திருஞானசம்பந்தர், அருணகிரிநாதர் முதலியோர் பாடியுள்ள ஸ்தலம். கடலூர் மாவட்டம், திருப்பாதிரிப் புலியூர் ரயில் நிலையத்திற்கு மேற்கே ஒரு கிலோ மீட்டர் தொலைவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. | வைகாசி மாதம் | 31.05.2017<br>04.06.2017<br>05.06.2017<br>06.06.2017<br>08.06.2017<br>9.06.2017<br>10.06.2017 | வைகாசிப்பெருவிழா கொடியேற்றம்<br>தெருவடைச்சான் உற்சவம்<br>வெள்ளிரதம்<br>திருகல்யாண உற்சவம்<br>திருத்தேரோட்டம்<br>முத்து பல்லக்கு<br>திருஞானசம்பந்தர் ஞானபால் உண்ட ஐதீக உற்சவம் | 04142 – 236728 | **www.padaleswarartemple.org**<br>Padaleswarartemple@gmail.com |
| 8. | அருள்மிகு தில்லைக்காளியம்மன் திருக்கோயில், சிதம்பரம் வட்டம். கடலூர் மாவட்டம். இத்திருக்கோயில் சுமார் 725 ஆண்டுகளுக்கு முன் கோப்பெருஞ்சிங்கன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்டுள்ளது. சிவம் பெரியதா, சக்தி பெரியதா என்ற விவாதம் கையிலயங்கிரியில் சிவனுக்கும் சக்திக்கும் இடையே ஏற்பட்டது. சிவமும் சக்தியும் ஒன்றே என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தவும், பார்வதி தேவியின் கர்வத்தை அடக்கவும் சிவபெருமான் பார்வதிதேவியை, காளியாக மாறுமாறு சபித்து விடுகிறார். காளியான பார்வதி தேவியார் சிதம்பரம் தில்லைவனத்தில் வந்து தங்கிவிடுகிறார். இவ்வாறாக தீயவைகளை அழிக்கும் கோப சக்தியாக தில்லைகாளியும் நல்லவைகளை அருளும் சாந்த சொரூபிணியாக தில்லையம்மனும் ஆக இருவடிவமாக இத்திருக்கோயில் இருந்து அருளாட்சி புரிகிறார். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் மாலை 4.30 மணி முதல் 6 மணி வரையில் ராகு கால பூஜையில் இக்காளியை வழிபட்டால் நாகதோஷம் நீங்கி திருமணத்தடை அகலும் என்பது ஐதீகம். | வைகாசி மாதம் | 16.05.2017<br>20.05.2017<br>24.05.2017<br>26.05.2017 | காப்பு கட்டுதல்<br>தெருவடைச்சான்<br>திருத்தேர்<br>முத்து பல்லக்கு | 04144–230251 | www.thillaikaliamman@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9. | அருள்மிகு வீரட்டானேஸ்வரர்சுவாமி திருக்கோயில், திருவதிகை, பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம். இத்திருக்கோயில் அப்பர், சுந்தரர், சம்மந்தர் ஆகிய மூவராலும் பாடல் பெற்ற திருக்கோயில் ஆகும். திருநாவுக்கரசர் மற்றும் திலகவதியார் ஆகியோரின் அவதாரத்தலம் அட்ட வீரட்ட தலங்களில் 3–வது தலமாக விளங்குகிறது. சிவபெருமான் முப்புராதிகளை தகனம் செய்த வீரத்தலம். வயிறு, மார்பு தொடர்பான நோய்களை போக்கும் பிரார்த்தனை தலமாக விளங்குகிறது. இத்திருக்கோயில் கி.பி.7–ம் நூற்றாண்டைச் சார்ந்தது. தஞ்சைப் பெரிய கோயிலைப் போன்ற அமைப்பை உடையது. ஆனால் காலத்தால் தஞ்சை பெரிய கோயிலை விட முற்பட்டது. பல்லவர் கால கலை அம்சங்களைக் கொண்டு விளங்குகிறது. | வைகாசி மாதம் | 29.05.2017<br>02.06.2017<br>06.06.2017 | கொடியேற்றம்<br>வெள்ளி ரிஷப வாகனப் புறப்பாடு<br>காலை திருத்தேர் புறப்பாடு<br>மாலை திரிபுரசம்ஹாரம் | அலுவலகம் 04142–243555<br>செயல் அலுவலர் 9443441292 | www.veerataneswarar@gmail.com |
| திருவண்ணாமலை மாவட்டம் | | | | | | |
| 10 | அருள்மிகு வேணுகோபாலபார்த்தசாரதி திருக்கோயில், செங்கம் நகர்<br>**அமைவிடம்**<br>திருவண்ணாமலையிலிருந்து சுமார் 37 கி.மீ தொலைவிலுள்ள செங்கம் நகரில் இத்தலம் அமைந்துள்ளது.<br><br>**திருத்தலச் சிறப்பு**<br>மதுரையை ஆட்சி செய்த திருமலை நாயக்கர் மரபில் வந்த தளவாய் என்பவன் செங்கத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சிற்றரசனாக அரசு செய்தான். அவனது குலதெய்வ கோயிலாக வேணுகோபாலபார்த்தசாரதி பெருமாள் கோயில் விளங்கியது. தினமும் அக்கோயிலுக்குப் பழங்களையும் மணமிக்க மலர்களையும் சமர்ப்பித்து அவன் தியானித்திருப்பான் பெருமாளுக்குப் பலவித அலங்காரங்களைச் செய்து மெய்மறந்திருப்பான். கண்கண்ட தெய்வமாக விளங்கிய அப்பெருமாளின் | 03.06.2017 முதல் 12.06.2017 வரை 10 நாள் கருட உற்சவம் | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். | செயல் அலுவலர், அ.கோ. படைவீடு (கூ.பொ)<br>9443477295 | vpperumaltemple.chengam@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | திருக்கோயிலினை அர்த்தமண்டபம், மகாமண்டபம் அமைத்து அவன் விரிவு செய்தான்.<br><br>இங்கு கருவறையினுள் ஸ்ரீ வேணுகோ பாலபார்த்தசாரதி பெருமாள் தனது தேவியர் பாமா, ருக்மணி சமேதராக நின்ற கோலத்தில் அருள்பாலிக்கின்றார். கருவறைக்கு வெளிப்புறம் சுமார் 10 அடி உயரமுள்ள துவார பாலகர்களின் கற்றிருமேனி காண்போரை வியக்கச் செய்கின்றது. வெளியே பிரகாரத்தில் தாயாருக்கு தனிச்சந்நிதியுள்ளது.<br>இங்குள்ள கல் மண்டபத்தில் பெருமாளின் அவதாரங்கள் கலைநயமிக்க சிற்பங்களாக மிளிர்கின்றன. மண்டப தளத்தின் கீழ் பகுதியில் இராமாயண இராமாயண வரலாற்றுப் படங்கள் பல வண்ணங்களால் காண்போரைக் கவரும் வண்ணம் வரையப்பட்டுள்ளன. | | | | | |
| 11. | அருள்மிகு லட்சுமிநரசிம்மசாமி ருக்கோயில், போளூர் நகர்<br>**அமைவிடம்**<br>திருவண்ணாமலை – வேலூர் சாலையில் திருவண்ணாமலையிலிருந்து 25 கி.மீ தொலைவிலுள்ள போளூர் நகரின் மையப்பகுதியில் மலைமீது அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br>பண்டைக் காலத்தில் சம்பத்கிரியின் அடிவாரத்தில் கல் தச்சர்கள் வசித்து வந்தனர். ஒருசமயம் இறைத்திருமேனிக்கான கருங்கல்லைக் கொணர வேண்டி அவர்கள் மலைமீது சென்றனர். அங்கு ஒரு பாறையின் மீது உதிரம் பெருகி வருவதைக் கண்டு பயந்தோடிக் கீழே இறங்கிவந்து ஊராரிடம் விவரத்தைக் கூற அதனைக் கேட்ட அனைவரும் ஒன்று சேர்ந்து மலைமீது சென்று பார்க்கையில், அங்கு சங்கு சக்கரத்தைத் திருக்கரங்களில் ஏந்திய வண்ணம் இலட்சுமி நரசிம்மரின் உருவில் உதிரப்பெருக்கு | 05.06.2017 முதல் 15.06.2017 வரை வைகாசி பிரம்மோற்சவம், சாமி வீதி உலா மற்றும் தேரோட்டம் நடைபெறும் | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். | செயல் அலுவலர், அ.கோ. படைவீடு (கூ.பொ)<br><br>9443477295 | renugambalammanpadaiveedu@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | தெரிந்தது. அனைவரும் நாராயண நாமஞ்சொல்லி விழுந்து வணங்கினர். ஒரு புண்ணிய காலத்தில் இலட்சுமி நரசிம்மசுவாமியின் திருமேனியை அங்குத் ஸ்தாபித்து கோயில் எழுப்பினர். ஸ்ரீ பெருமாளின் சக்தி எட்டுத்திக்கும் பரவிற்று. பக்தர்களின் வருகையால் நாளும் வழிபாடு அங்கு செழித்தது. இப்பெருமாளை இராமபிரான் வழிபட்டதாகவும் வழங்குகின்றனர். கருவறையில் சுயம்பு உருவமாக இலட்சுமிநரசிம்மர் காட்சியருளுகின்றார். அருகில் சிலாரூபத் திருமேனியும் உள்ளது. கனகவல்லித் தாயார் தனி சன்னதி கொண்டு அருள்புரிகின்றாள். மகா மண்டபத்தில் உட்சுவற்றில் பாகவதபுராண வண்ண ஓவியங்கள் உள்ளன. அருகில் உள்ள நீர்ச்சுனை சந்திர புட்கரணி என்று வழங்கப்படுகிறது. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுக்கள் இங்குள்ளன. | | | | | |
| 12. | அருள்மிகு. மாரியம்மன் திருக்கோயில், சின்னப்புத்தூர், ஆரணி வட்டம்<br><br>**அமைவிடம்**<br>ஆரணியிலிருந்து 17 கி.மீ தொலைவில் மேற்படி திருக்கோயில் அமைந்துள்ளது.<br><br>**திருத்தல சிறப்பு**<br>பொதுமக்கள் குலதெய்வ வழிபாடு செய்கின்றனர். | **02.06.2017**<br>கூழ்வார்க்கும் திருவிழா | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். | செயல் அலுவலர்,ஆரணி<br><br>**9659614736** | tnhrceeo.jageeralayam@gmail.com |
| 13. | அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், தானிப்பாடி, செங்கம் வட்டம்<br>**அமைவிடம்**<br>திருவண்ணாமலையிலிருந்து அரூர் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தண்டராம்பட்டிலிருந்து சுமார் 8 கி.மீ தொலைவில் தானிப்பாடி என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது.<br>**திருத்தல சிறப்பு**<br>கிராமமக்களின் குலதெய்வமாக வழிபாடு செய்கின்றனர். | வைகாசி<br>தேர் திருவிழா<br><br>(ஜூன் மாதம்) | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர் | ஆய்வர், செங்கம்<br><br>**9790278538** | 1980sivak@gmail.com |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14. | அருள்மிகு கில்லா வரதராஜப்பெருமாள் திருக்கோயில்,<br>ஆரணி நகர் மற்றும் வட்டம்<br>**அமைவிடம்**<br>ஆரணி நகரின் மையப்பகுதியில் காந்திரோடு– பெரியகடை தெருவில் அமைந்துள்ளது.<br>**திருத்தல சிறப்பு**<br>வேலூர் கோட்டையிலிருந்து வரதராஜப்பெருமாள் மூலவர் சிலை கொண்டு வந்து ஆரணி நகரின் மையப்பகுதியில் திருக்கோயில் அமைத்து ஜாகீர் சிற்றரசர்களால் பராமரிக்கப்பட்டு வந்த பழமையான<br>திருக்கோயில். | 26.05.2017 முதல் 05.06.2017 வரை பிரம்மோற்சவம்<br><br>02.06.2017 அன்று தேர் திருவிழா | | திரளான பக்தர்கள் கலந்துகொள்கின்றனர். | செயல் அலுவலர்,ஆரணி<br><br>9659614736 | tnhrceeo.jageeralayam@gmail.com |